2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அங்கே இருக்கின்ற மருத்துவமனையில் சில வசதிகள் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். அதை துறை ரீதியாக ஆய்வு செய்து, முடிந்தால் நானே நேரடியாகச் சென்று, அந்த மருத்துவமனையைப் பார்வையிட்டு, என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ, அவை நிவர்த்தி செய்துதரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அங்கிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். எத்தனை இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தாலும், மத்திய அரசால் நடத்தப்படுகின்ற* ESIC, *அதாவது* ESI Corporation–*ல் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஐம்பதாயிரம் காப்பீட்டாளர்கள், அதாவது தொழிலாளர்கள்* ESI Corporation–*ல் பதிவு செய்திருந்தால்தான் மருத்துவமனை ஆரம்பிக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

290—

இ–சேவை மையங்கள்

***27470—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் இ–சேவை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதியில் மொத்தம் 14 இ–சேவை மையங்களும், வில்லிவாக்கம் தொகுதியில் மொத்தம் 7 இ–சேவை மையங்களும் அமைக்கப்பட்டு, மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மேலும், வில்லிவாக்கம் ஊராட்சி அலுவலகத்தில் மகளிர் திட்டத்தின்கீழ் இ–சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது. வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பகுதி மக்களின் தேவைகளை இச்சேவை மையங்கள் தேவையான அளவில் நிறைவேற்றி வருவதால், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் புதியதாக இ–சேவை மையம் அமைக்கத் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாதவரம் தொகுதியிலே இருக்கின்ற வில்லிவாக்கம் ஒன்றியத்தில் பம்மதுக்குளம், பொத்தூர், வெள்ளானூர், மோரை, வெள்ளச்சேரி, அரக்கம்பாக்கம், ஆலத்தூர், பாலவேடு, கரலப்பாக்கம், பாண்டேஸ்வரம் ஆகிய 10 ஊராட்சிகளில் இ–சேவை மையக் கட்டடங்கள் கட்டப்பட்டு, அப்படியே இருக்கின்றன. அதற்கேற்ற கணினி மற்றும் மற்ற உபகரணங்களெல்லாம் இதுவரை வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது, internet வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

அதேபோன்று, சோழவரம் ஒன்றியத்தில் இருக்கின்ற 15 ஊராட்சிகளில் சோழவரம், ஒரக்காடு ஆகிய ஊராட்சிகளில்தான்

2018 ஜூலை 9]

இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. மற்ற இடங்களில் இ–சேவை மையக் கட்டடங்கள் கட்டப்பட்டு, திறக்கப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று, புழல் ஊராட்சியில் உள்ள தீர்த்தங்கரையம்பட்டு, கிராண்ட்லைன் ஆகிய இடங்களில் இயங்கி வந்த இ–சேவை மையங்கள் தற்போது இயங்காமல் இருக்கின்றன. இவையெல்லாம் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்; திறந்து, அதற்குத் தேவையான கணினி மற்றும் மற்ற உபகரணங்களெல்லாம் வழங்கி, internet *வசதியும் செய்து தர வேண்டும். ஒவ்வோர் ஊராட்சியும் சுமார் 30 ஆயிரம் பேர், 40 ஆயிரம் பேர் வசிக்கின்ற பெரிய ஊராட்சிகள் ஆகும்.* BDO office*–ல் இருக்கின்ற ஒரேயொரு கணினி மையத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சுதர்சனம், நீங்கள்தான் மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இவ்வளவு விரிவாகப் பேசுகிறீர்கள். யாரும் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறீர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி, அவற்றையெல்லாம் உடனடியாகத் திறந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுப்பதற்கு உடனடியாக ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்கள், 14–9–2015 அன்று பேரவை விதி 110–ன்கீழ், இ–சேவை மையங்கள் மூலமாக 300 சேவைகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால்,*

தற்போது 63 சேவைகள்தான் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் அதை அறிவித்து ஏறக்குறைய 3 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனவே, அந்தச் சேவைகளையெல்லாம் உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் மூலமாக ஹிமாச்சலப் பிரதேசத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, ஹிமாச்சலப் பிரதேச சட்டமன்றத்தில் இ–விதான் என்ற திட்டத்தை அமல்படுத்தி, மிக அருமையாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதேபோன்று நம்முடைய சட்டமன்றத்திற்கும் இ–விதான் திட்டம் எப்போது வரும்? நாங்கள் கேட்டபோது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்த அறிவிப்பு உங்களுக்கு வரும். அப்பொருள் சட்டமன்றம் சம்பந்தப்பட்டது. அதுகுறித்து நான்தான் சொல்ல வேண்டும். அதுகுறித்து நான் அறிவிப்பில் சொல்கிறேன்.

திரு. எஸ். சுதர்சனம்: முழுமையாகப் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: அதற்கு 77 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். உடனடியாக அதைச் செயல்படுத்த வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 24–2–2014 அன்று அறிவித்த இந்த இ–சேவை மையங்கள், 'கிராமங்களிலுள்ள மக்களைத் தேடி அரசு' என்ற நோக்கத்திலே ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தற்போது கிட்டத்தட்ட 10,428 மையங்கள் அமைக்கப்பட்டு, 10,862 counters மூலமாகச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு தொடங்கி வைத்தபோது, வெறும் 14 சேவை மையங்கள் மூலமாக 10 சேவைகள்தான் வழங்கப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேரவை விதி 110–ன்கீழ் 300

2018 ஜூலை 9]

சேவைகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். நோக்கம் 300 சேவைகளை வழங்க வேண்டும் என்பதாகும். இன்றையதினம் 213 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
பட்டியல் 9@

1—

உப்பாற்று நீரை நிரப்புதல்

வினா எண் 4654—திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிணத்துக்கடவு தொகுதி, கோதவாடி குளத்தில் உப்பாற்று நீரை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிணத்துக்கடவு தொகுதி, கோதவாடி குளத்தில் உப்பாற்று நீரை நிரப்ப தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

படித்துறைகளை கட்டுதல்

வினா எண் 13320—திரு. ஆர். முருகையா பாண்டியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரமசிங்கபுரம் நகராட்சி, அருள்மிகு பாபநாசர் உலகாம்பிகை திருக்கோயிலின் முன்புறம் தாமிரபரணி ஆற்றிலுள்ள

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.